# எச்சில் துப்பிய 200 பேருக்கு அபராதம்

**புதுச்சேரி, ஏப். 23–**

பொது இடத்தில் எச்சில் துப்பிய மற்றும் முக கவசம் அணியாத 200 பேரிடம் அபராதம் வசூலிக்கப்பட்டது.

புதுச்சேரியில் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நோய் பாதித்தவரின் எச்சில், சளி மூலம் பரவ அதிக வாய்ப்பு உள்ளது. ஆதலால், அனைவரும் கட்டாயம் முக கவசம் அணிய வேண்டும். பொது இடங்களில் சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும். பொது இடங்களில் எச்சில், சளி துப்ப தடை விதித்து உள்ளாட்சித் துறை நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

இதைத்தொடர்ந்து உழவர்கரை நகராட்சி ஊழியர்கள் நேற்று முக கவசம் அணியாமல் வீதிகளில் சென்றது மற்றும் பொது இடத்தில் எச்சில் துப்புவது தொடர்பாக 142 பேரிடம் தலா 100 ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டது. இதே போல் புதுச்சேரி நகராட்சி ஊழியர்கள், முககவசம் அணியாத 58 பேரிடம் தலா ரூ. 100 அபராதம் விதிக்கப்பட்டது.



உழவர்கரை நகராட்சி அதிகாரிகள் மாஸ்க் அணியாமல் இருசக்கர வாகனங்களில் சென்றவர்களுக்கு ஸ்பாட் ஃபைன் விதித்தனர். இடம்: இந்திரா சதுக்கம்.

இதேபோல் போலீசார் மற்றும் வருவாய் துறையினரும் அபராதம் வசூலித்தனர்.

**துணை ஆணையர் அட்வைஸ்**

கலால் துறை துணை ஆணையர் அலுவலகம் முன்பு நேற்று மாலை நின்றிருந்த வாலிபர், சாலையோரம் சளி சிந்தினார். அப்போது, அங்கு வந்த துணை ஆணையர் சஸ்வத் சவுரவ், அந்த வாலிபரை அழைத்து, கொரோனா பரவல் நேரத்தில் பொது இடத்தில் கைக்குட்டை இன்றி இருமக் கூடாது என அறிவுரை கூறி, அபராதம் வசூலிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# லாஸ்பேட்டை தொகுதியில்



முக கவசம் அணியாமல் வந்தவர்களிடம் உழவர்கரை நகராட்சி ஆணையர் கந்தசாமி தலைமையிலான அதிகாரிகள் அபராதம் வசூலித்தபோது எடுத்த படம்.

### நகராட்சி அதிகாரிகள் அதிரடி

# முக கவசம் அணியாதவர்களிடம் அபராதம் வசூல்

புதுச்சேரி, ஏப்.23–

புதுச்சேரியில் முககவசம் அணியாதவர்களிடம் நகராட்சி அதிகாரிகள், போலீசார் அதிரடியாக அபராதம் வசூலித்தனர்.

**ஊரடங்கு உத்தரவு**

கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் வகையில் புதுவையில் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டுமே வீட்டை விட்டு வெளியே வரவேண்டும். அப்போது கண்டிப்பாக முககவசம் அணிந்திருக்க வேண்டும். முககவசம் அணியாதவர்களுக்கு ரூ.100 அபராதம் விதிக்கப்படும் என்று முதல்–அமைச்சர் நாராயணசாமி ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தார். இருந்தபோதிலும் ஒரு சிலர் முக கவசம் அணியாமல் வெளியே சுற்றித் திரிந்தனர்.

இதற்கிடையில் ஊரடங்கை மீறுபவர்களிடம் அபராதம் வசூலிக்க உழவர்கரை, புதுச்சேரி நகராட்சிகளில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

**அபராதம் வசூல்**

இந்த நிலையில் நேற்று முக கவசம் அணியாமல் வந்தவர்களை இந்திரா காந்தி சிலை அருகே உழவர்கரை நகராட்சி ஆணையர் கந்தசாமி தலைமையிலான அதிகாரிகளும், போலீசாரும் தடுத்து நிறுத்தி அபராதம் விதித்தனர். 142 பேருக்கு தலா ரூ.100 அபராதம் விதிக்கப்பட்டு உடனடியாக வசூலிக்கப்பட்டது.

புதுவை நகராட்சி ஆணையர் சிவக்குமார் தலைமையில் அதிகாரிகளும் முககவசம் அணியாமல் வந்த 58 பேரிடம் தலா ரூ.100 அபராதம் வசூலித்தனர்.

**போக்குவரத்து போலீசார்**

தெற்கு பகுதி போலீஸ் சூப்பிரண்டு ஜிந்தா கோதண்டராமன் மேற்பார்வையில், கிருமாம்பாக்கத்தில் போக்குவரத்து இன்ஸ்பெக்டர் தனசேகரன், சப்–இன்ஸ்பெக்டர் தன்வந்திரி ஆகியோர் முககவசம் அணியாமல் வந்தவர்களுக்கு அபராதம் விதித்தனர்.

பாகூர், கிருமாம்பாக்கம், தவளக்குப்பம், அரியாங்குப்பம் பகுதியில் நேற்று ஒரே நாளில் முககவசம் அணியாமல் வந்த 60 பேரிடம் தலா ரூ.100 என மொத்தம் ரூ.6 ஆயிரம் வசூல் செய்யப்பட்டது. இதேபோல் ஒவ்வொரு போலீஸ் நிலையம் மற்றும் வருவாய்த்துறை சார்பிலும் அதிரடியாக அபராதம் வசூலிக்கப்பட்டது.

### புதுவையில் பொது இடங்களில்

# எச்சில் துப்பியவர்களிடம் ₹100 அபராதம் வசூல்

## அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை



முகக்கவசம் அணியாமல் வந்த பெண்ணிடம் உழவர்கரை நகராட்சி அதிகாரிகள் ரூ.100 அபராதம் வசூலித்தனர். இடம்: தட்டாஞ்சாவடி மார்க்கெட் கமிட்டி.

புதுச்சேரி, ஏப். 23: புதுவையில் பொது இடங்களில் எச்சில் துப்பியவர்களிடமும், முக கவசம் அணியாமல் வந்தவர்களிடமும் ரூ.100 அபராதத்தை நகராட்சி, வருவாய் அதிகாரிகள் நேற்று அதிரடியாக வசூலித்தனர்.

புதுவையில் கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த 20ம்தேதி முதல் ஊரடங்கில் கட்டுப்பாடுகளுடன் சில தளர்வுகள் அளிக்கப்பட்டுள்ளன. இதனால் சாலைகளில் மக்கள் நடமாட்டம் அதிகரிக்க தொடங்கி உள்ளது. இருப்பினும் மத்திய அரசின் விதிமுறைகளில் இடம்பெற்றுள்ள சமூக இடைவெளி கடைபிடித்தல், எச்சில் துப்புதல், முகக்கவசம் (மாஸ்க்) அணியாமல் செல்லுதல் உள்ளிட்டவற்றை புதுவையில் பெரும்பாலான மக்கள் கடைபிடிக்காமல் உள்ளனர். முதல்வரும், அமைச்சரும், அதிகாரிகளும் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வியாபாரிகளுக்கும், மக்களுக்கும் எச்சரிக்கை விடுத்தும் அலட்சியப்படுத்தினர்.

இதனால் கொரோனா வைரஸ் பரவலை தடுக்க அரசின் இதுபோன்ற விதிமுறைகளை மீறுபவர்களிடம் ரூ.100 அபராதம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி முதல்நாளில் புதுச்சேரி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 10 பேரிடம் அபராதம் வசூலிக்கப்பட்டது.

2ம் நாளான நேற்று புதுச்சேரி மட்டுமின்றி உழவர்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலும் அபராதம் வசூலிக்கும் பணியில் நகராட்சி அதிகாரிகள், இளநிலை பொறியாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பணியாளர்கள் ஆங்காங்கே ஈடுபட்டனர். மக்கள் அதிகளவில் கூடிய மார்க்கெட் மற்றும் முக்கிய சந்திப்புகளில் இந்த ஆய்வுப் பணிகளை மேற்கொண்ட அதிகாரிகள் முகக்கவசம் அணியாமல் வந்தவர்களை வழிமறித்து அபராதம் வசூலித்தனர்.

மேலும் காய்கறி அங்காடிகளில் சமூக இடைவெளியை கடைபிடிக்காமல் நின்றவர்களிடம், அலட்சியமாக இருந்த வியாபாரிகளிடமும் அபராதம் வசூலிக்கப்பட்டது. இதுதவிர பொதுஇடத்தில் எச்சில்துப்புதல், பொது இடத்தில் சளி, ரத்தம் சிந்துதல், கைக்குட்டை இல்லாமல் இருமியவர்கள் ஆகியோருக்கும் ரூ.100 அபராதம் விதிக்கப்பட்டு அதற்கான செல்லான் வழங்கப்பட்டது. 2ம் நாளில் 25க்கும் மேற்பட்டோரிடம் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

அபராதம் செலுத்த தவறியவர்கள் மீது பேரிடர் மேலாண்மை சட்டம் 52ன் கீழ் வழக்குபதிவு செய்து அவர்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து சுகாதார மேஸ்திரி கிரேட் 2 மற்றும் அதற்கு மேல் உள்ள அதிகாரிகள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் அதற்குமேல் உள்ள அதிகாரிகள், போலீஸ் துறையில் ஏட்டுகள் மற்றும் அதற்கு மேல் உள்ள அதிகாரிகள் இந்த அபராதத்தை வசூலிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக தனி செல்லான் பிரிண்ட் செய்யப்பட்டுள்ளது. இந்த உத்தரவு அரசிதழில் விரைவில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

தடையை மீறி திறக்கப்பட்ட

# இரும்பு கடைக்கு 'சீல்'

மூலக்குளம், ஏப்.23-

புதுச்சேரியில் ஊரடங்கு அமலில் உள்ளதால் அத்தியாவசிய பொருட்கள் தவிர மற்ற கடைகள் திறக்கக்கூடாது என அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கிடையில் கடந்த 20-ந் தேதி முதல் ஊரடங்கில் சில தளர்வுகள் செய்யப்பட்டன. இந்தநிலையில் மூலக்குளம் பகுதியில் நேற்று மாலை இரும்பு கடை ஒன்று திறந்து இருந்தது. தகவல் அறிந்த உழவர்கரை நகராட்சி அதிகாரிகள் அங்கு விரைந்து வந்து, தடை உத்தரவை மீறியதாக இரும்பு கடைக்கு 'சீல்' வைத்தனர்.